மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) சென்னையிலுள்ள கர்நாடக இசைக் கல்லூரியில் புதிதாக கீழ்க்கண்ட வகுப்புகள் தொடங்க அனுமதிக்கப் பட்டுள்ளன :—

(1) புல்லாங்குழல் ;

(2) மிருதங்கம் ;

(3) பரதநாட்டியம்.

(ஆ) புல்லாங்குழல், மிருதங்கம், வகுப்புகளுக்கான பாடத் திட்டம் முடிவு செய்யப்பட்டு வருகிறது. பரத நாட்டிய வகுப்பிற்கு பரதநாட்டியத்தில் அரசு தொழில் நுட்பத் தேர்வுக்கான (உயர்நிலை) பாடத் திட்டத்தையே கர்நாடக இசைக் கல்லூரியில் ஆரம்பிக்கவிருக்கும் பரதநாட்டியம் வகுப்பிற்கும் வைத்துக் கொள்ளலாமென்று அந்தக் கல்லூரித் தலைவர் கூறியுள்ள யோசனையை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணம்

*404 **வினா—திரு. சி. மணலி கந்தசாமி** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்யும் செயற் குறிப்பு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இன்றைக்கு மாணவர்களுக்கு பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி கொடுக்கப் படுகிற காரணத்தால், எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு பீஸ் கட்டாமல் பரிட்சைக்கு செல்லுவதற்கு இந்த ஆண்டு எழுதும் மாணவர்களுக்காவது எக்சம்ஷன் அளிப்பதற்கு ஆலோசிக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி கொடுப்பது என்பது வேறு

1972 மார்ச் 10]

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குக் கட்டணம் வசூலிப்பது என்பது வேறு. பல வகையில் நாம் இலவசக் கல்விக்கு ஆதரவு கொடுத்திருக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணம் ரூ. 15 என்று நீண்ட காலத்திற்கு முன்பே இருந்து வருகிற ஒன்று. அதைக் கூட்ட வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசிடத்தில் இருந்தாலும், ரூ. 20 ஆக்க வேண்டுமென்று இருந்தாலும், அதை நடைமுறைப் படுத்தாமல் ரூ. 15 என்றே வசூலித்து வருகிறது. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் இந்தக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒரு 15 ஆண்டுகள் படித்த பிறகு இந்தப் பள்ளி இறுதி வகுப்புக்கு ரூ. 15 இருப்பது முறையான ஒன்றுதான். செலவு வகையைக் கணக்கிட்டால் வசூலிக்கக்கூடிய இந்தக் கட்டணத்திற்கும் அதிகமாக ஆகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்போது தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்ட தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கு அரசு ஏதேனும் பண உதவி கொடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே. அரசாங்கத்தின் கொள்கை பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி என்று இருக்கிற போது, அதற்கிடையில் இருக்கும்படியான எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு எக்சாமினேஷன் பீஸ் வசூல் செய்வது முறையானதல்ல. கேரளா போன்ற அண்டை மாநிலங்களில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குக் கட்டணம் வசூலிப்பது இல்லை. ஆகவே, அரசாங்கம் இதை மறு பரிசீலனை செய்து எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : இலவசக் கல்வி என்பது வேறு. எக்சாமினேஷன் பீஸ் என்பது வேறு, டியூஷன் பீஸ் என்பது வேறு. இலவசக் கல்வி என்கிறபோது, டியூஷன் பீஸ் வசூலிப்பது இல்லை என்பதாகும். இந்த ரூ. 15 என்பது நீண்ட பெரும் காலத்திற்கு முன்பே உருவாக்கப்பட்ட ஒன்று. வேறு பல பல்கலைக் கழகங்களிலும் இது பின்பற்றப்பட்டு வருகிறது. கேரளாவில் இல்லை என்று சொன்னார்கள். அது

பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. அரசாங்கத்தின் கொள்கையில் அதை தற்போது நிறுத்தும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

English medium schools

* 405 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of High Schools and Elementary Schools in this State (apart from convents) which impart instructions to students in English medium also during the academic year 1969-70;

(*b*) the strength under English medium sections in each class; and

(*c*) the average proportion of the students in the English medium classes to those in other mediums in those schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

(அ) உயர்நிலைப் பள்ளிகள் 204 (கான்வென்ட் தவிர). தொடக்கப் பள்ளியில் ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்பு கிடையாது.

(இ) 1-வது வகுப்பிலே 45-ம், இரண்டாம் வகுப்பில் 47-ம், மூன்றும் வகுப்பில் 53-ம், நான்காம் வகுப்பில் 55-ம், ஐந்தாம் வகுப்பில் 44-ம் இருக்கின்றன. இந்த வகுப்புகள் சென்னை, தி.நகர் வித்தியோதயா மகளிர் உயர்நிலைப் பள்ளியில் மட்டும் நடத்தப்படுகின்றன. மற்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் 6-ம் வகுப்பில் 8,508 மாணவர்களும், ஏழாம் வகுப்பில் 7,981 மாணவர்களும், எட்டாம் வகுப்பில் 7,765 மாணவர்களும், ஒன்பதாம் வகுப்பில் 7,495 மாணவர்களும், பத்தாம் வகுப்பில் 6,535 மாணவர்களும், பதினோரும் வகுப்பில் 5,343 மாணவர்களும், ஆக மொத்தம் 43,871 மாணவர்கள் இருக்கின்றனர்.

(உ) சராசரி விகிதாச்சாரம் 17:83.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஆங்கிலப் படிப்பை ஊக்குவிக்கும் வகையில் இன்னும் அதிகமாக இந்த எஜுகேஷன் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம்